TNMD010031902024



**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மதுரை.**

முன்னிலை திரு.S.ஜான் சுந்தர்லால் சுரேஷ் , B.Sc.,M.L.,
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.

**2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10ம் நாள் திங்கட்கிழமை**

**அமர்வு வழக்கு எண். 195/2024**

CNR No.TNMD010031902024

---

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர், தெப்பக்குளம் காவல் நிலைய குற்ற எண்.1268/2013 |
| குற்றஞ்சாட்டப் பட்டவரின் பெயர் | : | A2– கணக்கன் (எ) முனியசாமி, (44/2013) த/பெ கிருஷ்ணன் |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மீது இ.த.ச. பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506 (ii) –ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் தீர்மானம் | : | இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) இ.த.ச. பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506 (ii)–ன் கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| தீர்ப்பும் தண்டனையும் | : | முடிவாக, இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) இ.த.ச.பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506 (ii)–ன் கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>மேலும் இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) வழங்கிய பிணை பத்திரங்களை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இந்த வழக்கில் இருந்து 1ம் எதிரி காளி (எ) காளீஸ்வரன் என்பவர் மீதான வழக்கு தனியாக பிரித்தெடுக்கப்பட்டு, S.C.No. 247/2025 என எண் வழங்கப்பட்டு, வழக்கு நிலுவையின் போது, கடந்த 17.06.2025ம் தேதி 1ம் எதிரி காளி (எ) காளீஸ்வரன் இறந்து போனதாக அவருடைய பிணக்கூராய்வு சான்று தாக்கல் செய்யப்பட்டு, |

| | | |
|---|---|---|
| | | அதனடிப்படையில், மாண்புமிகு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தால் 1ம் எதிரி மீதான வழக்கு அற்றுப்போனதாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கில் RPR No.33/2026-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அயிட்டம் எண்.3- சா.பொ.1 கத்தி மற்றும் அயிட்டம் எண்.1 கத்தி ஆகியவைகள் பயனற்றவை என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழிக்கவும் மற்றும் அயிட்டம் எண்.2ல் காட்டப்பட்டுள்ளதும், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மதுரை அவர்களின் பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ளதுமான ரூ.500/- ஐ நீதித்துறை நடுவர் எண்.1, மதுரை அவர்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அரசுக்கு ஆதாயப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக இன்று 10.08.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுதரப்பில், அரசுதரப்பு குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர் திரு.R.செந்தில் பிரபாகர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.M.விவேகாநந்தன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் வந்ததில் இதுநாள்வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான தீர்ப்புரை

## வழக்கு சுருக்கம்

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) 03.12.2013 முதல் 29.03.2014 வரை = 117 நாட்கள். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 23.07.2014 |
| 3. | முதல் நிலை பதிவேட்டு விசாரணை முடிந்து மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | 29.02.2024 |
| 4. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவப்பட்ட நாள் | 28.07.2026 |
| 5. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **சாட்சிகள்** | **மு.வி.** | **கு.வி.** |
| | | அ.சா.1 | 03.08.2026 | இல்லை |
| | | அ.சா.2 | 03.08.2026 | 03.08.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 10.08.2026 | | |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை | | |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை | | |

## <u>தீர்ப்புரை</u>

**2.** அரசு தரப்பு வழக்கானது, கடந்த 03.12.2013ம் தேதி காலை 08.45 மணியளவில் வாதி அம்மாசி என்பவர் மதுரை டவுன், பழைய குயவர் பாளையம் ரோடு, அகர்வால் கல்யாண மண்டபம் அருகில் நடந்து வந்தபோது, இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி ஆகியோர்கள் வாதியை வழிமறித்து, தங்கள் இடுப்பில் வைத்திருந்த கத்திகளை எடுத்து, இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி வாதியை பார்த்து, "இப்படியே ஒரே சொருகா சொருகுனா தான் தெரியும்" என்று சொல்லியபடி வாதியின் நெஞ்சில் வைத்து

அழுத்தியும், இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) தன் கையில் வைத்திருந்த கத்தியால் வாதியின் விலாவில் வைத்து அழுத்தியும், இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி வாதியின் சட்டைப்பையில் இருந்த பணம் ரூ.1,500/−ஐ பறித்து கொண்டும், அருகில் இருந்தவர்கள் மற்றும் அந்த வழியே வந்தவர்கள் எதிரிகளை பிடிக்க வரவும், எதிரிகள் தங்கள் தலைக்கு மேலே தூக்கி சுழற்றியபடி, எங்களை யாராவது பிடிக்க வந்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளார்கள் என்றும், எனவே இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி ஆகியோர்கள் இ.த.ச.பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506(ii)−ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் விளைவித்ததாக தெப்பக்குளம் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3**. இந்த வழக்கினை நீதித்துறை நடுவர் எண்.1, மதுரை அவர்கள் முதல் நிலை பதிவேடு வழக்கு எண்.35/2014 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொண்டு, இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2)−க்கு கு.வி.மு.ச.பிரிவு 207ன் படி வழங்கப்பட வேண்டிய வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கிய பின்னர் இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் மாண்புமிகு மதுரை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு

பணிந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்ததில் அந்த வழக்கு அமர்வு வழக்கு எண்.195/2024 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொண்டு பின் விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**4**. இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்காவணங்களை ஆராய்ந்து குற்றச்சாட்டு வனைந்து வினவ முதல்நிலை நோக்கு தென்பட்டதால், 28.07.2026ம் தேதி எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மீது இ.த.ச. பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506 (ii)–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) குற்றவாளி இல்லை என்று குற்றத்தை மறுத்ததின் பேரில் அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**5**. இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணைங்களில் இருந்து புலனாகும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கமாவது:**

இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட தெப்பக்குளம் காவல் நிலைய நடப்பு ஆய்வாளர் அ.சா.2 திருமதி.வேதவள்ளி என்பவர்

தனது சாட்சியத்தில், கடந்த 03.12.2013ம் தேதி காலை 08.45 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்த சார்பு ஆய்வாளர் சாட்சி எண்.10 ராஜேந்திரன் என்பவர் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சாட்சி எண்.1 அம்மாசி என்பவர் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.1268/2013 இதச பிரிவு 392, 397 மற்றும் 506(ii)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும், புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையையும் மதுரை, நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கும் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார் என்றும், வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் சாட்சி எண்.11 ரமணி அவர்களிடம் மேல்விசாரணைக்காக ஒப்படைத்துள்ளார் என்றும், அவர் வழக்குக் கோப்பை பெற்று 03.12.2013ம் தேதி காலை 10.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாட்சி எண்.6 முனீஸ்வரன், சாட்சி எண்.7 செந்தில் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.3 பார்வை மகசர், மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ சாட்சிகளான அ.சா.1 மணிகண்டன் மற்றும் சாட்சி எண்.3 பக்ருதீன் ஆகியோர்களிடம் தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரிகளான காளீஸ்வரன் மற்றும் கணக்கன் என்ற முனியசாமி ஆகியோர்களை தேடி வந்த நிலையில் அன்றைய தினம் 03.12.2013ம் தேதி 14.00 மணிக்கு மதுரை டவுன் கீழவாசல் பஸ்ஸ்டாப் அருகில் வைத்து சாட்சி எண்.8 வெங்கடாச்சலபதி மற்றும் சாட்சி எண்.9 துளசிராம் ஆகியோர்கள்

முன்னிலையில் காரணம் கூறி கைது செய்து, எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டபகுதி அ.சா.ஆ.5 என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் சாட்சி எண். 11 திரு.ரமணி அவர்கள் 03.12.2013ம் தேதி 16.15 மணிக்கு 49 செ.மீ மடக்கு கத்தி ஒன்று (அதில் கைப்பிடி 14 செ.மீ அளவுள்ளது) மற்றும் பணம் ரூ.500/– மற்றும் 16.45 மணிக்கு கணக்கன் என்ற முனியசாமி என்பவரிடமிருந்து சா.பொ.1 –52 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடி கத்தி (அதில் இரும்பு பாகம் 42 செ.மீ, மரக்கைப்பிடி 10 செ.மீ) ஒன்று ஆகியவற்றை அ.சா.ஆ.6 அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார் என்றும், எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய சான்றுபொருட்களை படிவம் அ.சா.ஆ.7 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து, நீதிமன்ற காவலுக்கு எதிரிகள் உட்படுத்தப்பட்டனர் என்றும், பிறகு புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 392, 397 மற்றும் 506(ii) கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**7.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் படி

கேள்வி கேட்க எதிரி பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மீது இ.த.ச.பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506 (ii)–ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**9 . பிரச்சனை** :

அரசுத்தரப்பு வழக்கானது, கடந்த 03.12.2013ம் தேதி காலை 08.45 மணியளவில் வாதி அம்மாசி என்பவர் மதுரை டவுன், பழைய குயவர் பாளையம் ரோடு, அகர்வால் கல்யாண மண்டபம் அருகில் நடந்து வந்தபோது, இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி ஆகியோர்கள் வாதியை வழிமறித்து, தங்கள் இடுப்பில் வைத்திருந்த கத்திகளை எடுத்து, இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி வாதியின் நெஞ்சில் வைத்து அழுத்தியும், இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) தன் கையில் வைத்திருந்த கத்தியால் வாதியின் விலாவில் வைத்து அழுத்தியும், இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி வாதியின் சட்டைப்பையில்

இருந்த பணம் ரூ.1,500/−ஐ பறித்து கொண்டும், எங்களை யாராவது பிடிக்க வந்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் செய்துள்ளார்கள் என்பதாகும்.

10. அரசு தரப்பு அறிவார்ந்த குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர், இந்த வழக்கில் சாட்சி எண்.1 அம்மாசி என்பவர் கடந்த 03.12.2013ம் தேதி 09.45 மணிக்கு தெப்பக்குளம் காவல் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.1 புகாரின் அடிப்படையில் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டு, இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் இந்த வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் அ.சா.1 மணிகண்டன் வழக்கு சம்பவத்தை தான் பார்க்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார் என்பது மட்டுமின்றி, வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் இதர சாட்சிகளான சாட்சி எண்.3, சாட்சி எண்.4 மற்றும் சாட்சி எண்.5 ஆகியோர்கள் இந்த வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றும்,

எனவே இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மீதான குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**12**. இரு தரப்பு வாதங்களும் பரிசீலிக்கப்பட்டது. அரசுத்தரப்பு வழக்கானது, கடந்த 03.12.2013ம் தேதி காலை 08.45 மணியளவில் வாதி அம்மாசி நடந்து வந்தபோது, இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி ஆகியோர்கள் வாதியை வழிமறித்து, தங்கள் இடுப்பில் வைத்திருந்த கத்திகளை எடுத்து, இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி வாதியின் நெஞ்சில் வைத்து அழுத்தியும், இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) தன் கையில் வைத்திருந்த கத்தியால் வாதியின் விலாவில் வைத்து அழுத்தியும், இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1ம் எதிரி வாதியின் சட்டைப்பையில் இருந்த பணம் ரூ.1,500/—ஐ பறித்து கொண்டும், எங்களை யாராவது பிடிக்க வந்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் செய்துள்ளார்கள் என்பதாகும். ஆனால் இந்த வழக்கு சம்பவம் குறித்து புகார் கொடுத்ததாக சொல்லப்படும் சாட்சி எண்.1 அம்மாசி என்பவரை இந்த வழக்கில் ஆஜர் படுத்த இயலவில்லை என்று

காவல் துறையினரால் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது மட்டுமின்றி, வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் இதர சாட்சிகளான சாட்சி எண்.3 பக்ருதீன், சாட்சி எண்.4 குப்புசாமி மற்றும் சாட்சி எண்.5 அப்துல் காதர் ஆகியோர்களையும் ஆஜர்படுத்த இயலவில்லை என்றும், அதனால் ஏற்படும் சட்ட விளைவுகளுக்கு தாங்களே பொறுப்பு என்றும் காவல் துறையினரால் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அ.சா.2 நடப்பு காவல் ஆய்வாளர் திருமதி.வேதவள்ளி அவர்கள் இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது சம்பந்தமாக சாட்சிமளித்திருந்தாலும், இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) மீதான குற்றச்சாட்டுக்களானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கு சம்பவம் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்யலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) இ.த.ச.பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506 (ii)–ன் கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் இவ்வழக்கின் எதிரி கணக்கன் (எ) முனியசாமி (A2) வழங்கிய பிணை பத்திரங்களை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் இருந்து 1ம் எதிரி காளி (எ) காளீஸ்வரன் என்பவர் மீதான வழக்கு தனியாக பிரித்தெடுக்கப்பட்டு, S.C.No. 247/2025 என எண் வழங்கப்பட்டு, வழக்கு நிலுவையின் போது, கடந்த 17.06.2025ம் தேதி 1ம் எதிரி காளி (எ) காளீஸ்வரன் இறந்து போனதாக அவருடைய பிணக்கூராய்வு சான்று தாக்கல் செய்யப்பட்டு, அதனடிப்படையில், மாண்புமிகு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தால் 1ம் எதிரி மீதான வழக்கு அற்றுப்போனதாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கில் RPR No.33/2026–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அயிட்டம் எண்.3–சா.பொ.1 கத்தி மற்றும் அயிட்டம் எண்.1 கத்தி ஆகியவைகள் பயனற்றவை என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழிக்கவும் மற்றும் அயிட்டம் எண்.2ல் காட்டப்பட்டுள்ளதும், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மதுரை அவர்களின் பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ளதுமான ரூ.500/– ஐ நீதித்துறை நடுவர் எண்.1, மதுரை அவர்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அரசுக்கு ஆதாயப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.10 18:46:28 +0530

1வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.

**அரசு தரப்பு சாட்சிகள்** :–

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.மணிகண்டன் |
| அ.சா.2 | திருமதி.வேதவள்ளி, நடப்பு காவல் ஆய்வாளர், தெப்பக்குளம் காவல்நிலையம் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 03.12.2013 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 03.12.2013 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 03.12.2013 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 03.12.2013 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 03.12.2013 | 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | 03.12.2013 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.7 | 03.12.2013 | படிவம் –91 |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்** :–

| | |
|---|---|
| சா.பொ.1 | சுமார் 32 செ.மீ. நீளமுள்ள மரக்கைபிடியுடன் கூடிய கத்தி ஒன்று (அதில் கத்தி பாகம் சுமார் 22 செ.மீ., மரக்கைபிடி பாகம் 10 செ.மீ) |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்** : இல்லை

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.10 18:46:34 +0530

1வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

மதுரை